[*1995 ஏப்ரல் 28*

3. தகவல் கோரல்-தொடர்ச்சி

(ஆ) முன் அனுமதியின்றி பிரச்சினையை எழுப்புதல்

(பேரவைப் பணிகளினின்றும் திருவாளர்கள் எஸ்.டேனியேல்ராஜ், மா. சுந்தரதாஸ் இலதா பிரியகுமார், கா. பன்னீர்செல்வம், ஏ.எஸ். பொன்னம்மாள் ஆகியோர் தற்காலிகமாக நீக்கவைக்கப்பெற்றது உள்பட)

திரு. எஸ். டேனியல் ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டேனியல்ராஜ், இது முறையல்ல. (குறுக்கீடு) இது முறையல்ல (குறுக்கீடு) இது முறையல்ல (குறுக்கீடு) இந்த முறைகேட்டை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) முறைகேட்டை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு முறைகேடு என்பது வாடிக்கையாக இருக்கலாம். ஆனால் இந்தப் பேரவைக்கு அது வாடிக்கையாக இருக்க முடியாது. (குறுக்கீடு) திரு. டேனியல்ராஜ் உட்கார வேண்டும் (குறுக்கீடு) உட்கார வேண்டும் (குறுக்கீடு) டேனியல்ராஜ், உட்கார வேண்டும் (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) ஏற்கெனவே நீங்கள் எழுப்பி, அனுமதி மறுத்த பிரச்சினை. (குறுக்கீடு) முறைகேட்டை நான் அனுமதிக்க முடியாது. டேனியல்ராஜ் உட்கார வேண்டும். (குறுக்கீடு) உட்கார வேண்டும் (குறுக்கீடு) உட்கார வேண்டும் (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்ததற்குப் பிறகு இங்கே எழுப்ப முடியாது. இதுதான் விதி. (குறுக்கீடு) இங்கே எழுப்ப முடியாது, நான் அனுமதி மறுத்திருக்கிறேன்.(குறுக்கீடு) அறையிலே அனுமதி மறுத்திருக்கிறேன். நீங்களே முதலில் ஒருவிதமாகக் கொடுத்தீர்கள். அது சரியல்ல என்று 9.43க்கு இரண்டாவது கொடுத்தீர்கள். உங்கள் மனச்சாட்சிக்கே கொடுப்பது சரியில்லை என்று தெரிந்தது. (குறுக்கீடு) ஏனென்றால் முதலில் ஓர் அறிவிப்புக் கொடுத்தீர்கள். அது சரியில்லை. 9.43க்கு வேறுவிதமாகக் கொடுக்கிறோம் என்று கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) எனவே நான் அனுமதி மறுத்ததை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) டேனியல்ராஜ், நீங்கள் கொடுத்த பிரச்சினையே முன்னுக்குப்பின் முரண் என்பதை நீங்களே ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) 9.20க்கு ஒரு பிரச்சினையை

நீங்கள் கொடுத்தீர்கள். அது சரியில்லை என்று 9.43க்கு, அதை என்னிடம் திருப்பிக் கொடுங்கள் என்றீர்கள். (குறுக்கீடு) நான் சரியில்லை என்று சொன்னேன். (குறுக்கீடு) சரியில்லை என்று சொன்னதற்குப் பிறகு இன்னொருமுறை மாற்றிக் கொடுத்திருக்கிறீர்கள் (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிற அந்த அறிவிப்பு சரியில்லை, ஏற்புடையதல்ல, நான் அதற்கு அனுமதி மறுத்திருக்கிறேன். எனவே, நான் அனுமதி மறுத்ததை இங்கே வந்து எழுப்ப முடியாது. (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்ததை எப்படி இங்கே எழுப்ப முடியும்? (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்ததை எப்படி இங்கே எழுப்ப முடியும்? (குறுக்கீடு) டேனியல்ராஜ், உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்கவா? (குறுக்கீடு) உட்காருகிறீர்களா? (குறுக்கீடு) நடவடிக்கை எடுக்க வேண்டிவரும் (குறுக்கீடு) டேனியல்ராஜ், அவையை விட்டு வெளியேற வேண்டும். பேரவை விதி 120-ன்கீழ் டேனியல்ராஜ் அவையை விட்டு வெளியேற வேண்டுமென்று உத்திரவிடுகிறேன். (குறுக்கீடு) அவையை விட்டு வெளியேற வேண்டுமென்று உத்திரவிடுகிறேன். (குறுக்கீடு) அவையை விட்டு வெளியேற வேண்டுமென்று உத்திரவிட்டால், பேச வேண்டுமென்று கேட்டால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) அவையை விட்டு வெளியேறுமாறு உத்திரவிடுகிறேன். (குறுக்கீடு) கேட்க முடியாது. (குறுக்கீடு) என்னுடைய அறையில்-நான் அனுமதி மறுத்த பிரச்சினையை அவையில் எழுப்ப முடியாது என்றுதான் நம்முடைய விதி இருக்கிறது. (குறுக்கீடு) உங்கள் தலைவிதி எப்படியோ இருந்தால் நான் விதியை மீறிப் போக முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) உங்களுடைய தலைவிதி இப்படி இருக்குமேயானால் நான் விதியை மாற்ற முடியுமா? (குறுக்கீடு) டேனியல்ராஜ், அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) மார்ஷல், காவலர்களோடு டேனியல்ராஜை வெளியேற்றவும் (கூச்சல் குழப்பம்)

(திரு.எஸ். டேனியல்ராஜ் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்).

நான் இன்னொரு பிரச்சினையை எடுக்கப் போகிறேன். (குறுக்கீடுகள்)

(திரு. மா. சுந்தரதாஸ் மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் வந்து கீழே உட்கார்ந்தார்)

திரு. மா. சுந்தரதாஸ் என்னுடைய இருக்கைக்கு அருகில் வந்து இப்படி கீழே உட்கார்ந்து கொண்டிருப்பது முறைகேடான செயல். எனவே திரு. சுந்தரதாசை காவலர்கள் அப்புறப்படுத்த வேண்டும்.

[பேரவைத் தலைவர்] [*1995 ஏப்ரல் 28*

(திரு. மா. சுந்தரதாஸ் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

'உட்காருகிற, ஒழுங்கு மீறிய, வரம்பு மீறிய உறுப்பினர்கள் அனைவரையும் அப்புறப்படுத்த காவலர்களுக்கு உத்திரவிடுகிறேன்.

(திருமதி இலதா பிரியகுமார், திரு. சா. பன்னீர்செல்வம் ஆகியோர் மாண்புமிகு பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் வந்து கீழே உட்கார்ந்தார்கள்)

(திருமதி இலதா பிரியகுமார், திரு.சா. பன்னீர்செல்வம் ஆகியோர் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்)

முறைகேடாக நடக்கிற உறுப்பினர்களை வெளியேற்றவும் (குறுக்கீடு) இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் அல்ல. முறைகேடானவர்களை அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

(திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், திரு. ப. ரங்கநாதன் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்)

(திரு.சி. ஞானசேகரன் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்)

(திரு.ஆர். சிங்காரம், திரு.கே.கே. சின்னப்பன், திரு வே. கண்ணன், திருமதி ஜீனத் சர்புதீன் திரு. இரா. அப்பு நடேசன் ஆகியோரைத் தவிர அவையிலிருந்த காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் பேரவையிலிருந்து வெளியேறினர்.)

முற்பகல் *11–20*

இவர்களுடைய தலைவர் ஒருவருக்கும் இன்றையதினம் தூக்கிலிடப்பட்டு இருக்கிற ஆட்டோ சங்கர் என்கிற அந்த மிகக் கொடியவனுக்கும் தொடர்பு இருப்பதாக நாட்டிலே கூறப்படும் செய்தி உண்மைதான் என்பதை (குறுக்கீடுகள்) இவர்கள் இந்த அவையிலே வந்து கருப்புத் துண்டு போர்த்தி நடந்துகொண்ட நிகழ்ச்சியிலே இருந்து தெரிகிறது. *(கூச்சல்–குழப்பம்)* இவர்களுடைய தலைவர் ஒருவருக்கு அந்த ஆட்டோ சங்கர் மிக நெருங்கிய தொடர்புடையவன் என்று பத்திரிகைகள் எல்லாம் எழுதின. அது அப்பட்டமான உண்மை என்பதை இன்றைக்கு அந்தத் தலைவருக்கு மிக நெருக்கமான காங்கிரஸ் உறுப்பினர்கள் இவ்வளவு அப்பட்டமாகக் காண்பித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் உள்ளே வந்தபோது, நீங்கள் அதைப் பற்றிச் சொன்னீர்கள். எனக்கு என்ன மகிழ்ச்சி என்றால், எங்களுடைய

1995 ஏப்ரல் 28] [திரு. எஸ்.டி. சோமசுந்தரம்]

திராவிட இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எப்போதும் கருப்புத் துண்டு அணிவார்கள். ஆனால் இவர்களும் கதர்த் துண்டை எடுத்துவிட்டு, கருப்புத் துண்டைப் போட்டுக் கொண்டு வந்ததற்கு அவர்களுக்குப் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திராவிட இயக்கமே பாழாய்ப் போகும் இப்படித் துண்டு போட்டால் (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அது மட்டுமல்ல, (குறுக்கீடு) அண்ணா சாலையில் அண்ணாவுடைய சிலை இருக்கிற இடத்தில் காங்கிரஸ்காரர்கள் ஒரு ஊர்வலம் போகிறபோது அண்ணாவைப் பார்க்கக்கூடாது என்பதற்காக, கருப்புத் துண்டை முகத்திலே போட்டுக் கொண்டு போனார்கள். அண்ணாவுக்கு முன்னாலே கருப்புத் துண்டை முகத்திலே போட்டு மூடிக்கொண்டு போனது என்பது, அவர்கள் எவ்வளவு சிறந்த பண்பாளர்கள் என்பதையும் காட்டுகிறது. அப்படிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செல்வராசன், என்ன சொல்லப்போகிறீர்கள்? (குறுக்கீடு) அது பற்றி எந்த அறிவிப்பையும் எனக்குக் கொடுக்கவில்லை. நீங்கள் கொடுக்காமல், நீங்களாக எதையும் இங்கே கேட்க முடியாது. (குறுக்கீடு) ஏற்கெனவே கொடுத்தவர்களுக்கே நான் அனுமதி மறுத்திருக்கிறேன். அதற்குப் பிறகு அதை இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) அதை எழுப்ப முடியாது. என்ன கொடுத்தீர்கள்? (குறுக்கீடு) அறிவிப்பு ஏதேனும் கொடுத்தீர்களா? (குறுக்கீடு) அறிவிப்பே கொடுக்காமல், எழுந்து நிற்பது முறையல்ல,. உட்காருங்கள். (குறுக்கீடு) அறிவிப்பே கொடுக்காமல் எழுந்து நிற்பது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடு) அறிவிப்பு கொடுக்காமல் இங்கே எழுப்புவது முறையல்ல. உட்காருங்கள்.

(உறுப்பினர் திரு.அ. செல்வராசன், அறையிலிருந்து வெளியேறினார்.)

பரிதி, நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்? அறிவிப்பு எதையும் நீங்கள் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) திரு.. பரிதி இளம்வழுதி.

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று பிளாக் நகர் குடியிருப்பிலே குடியிருந்து கொண்டிருக்கும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறிவிப்பு 9.40 மணிக்கு வந்து கொடுத்தீர்கள், நாளை எடுத்துக் கொள்கிறேன் என்று